செய்தி வெளியீடு எண். 142 நாள்.04.03.13

வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.'தோப்பு' என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள் தலைமையில் இன்று (4.3.2013) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த்துறையின் முதன்மைச் செயலர் திரு ராஜீவ்ரஞ்சன், இ.ஆ.ப., கூடுதல் தலைமைச்செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் டி.எஸ் ஸ்ரீதர், இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித் திட்டத்துறையின் முதன்மைச் செயலர் / ஆணையர் திரு.ரமேஷ்ராம் மிஷ்ரா, இ.ஆ.ப., நில சீர்திருத்தத்துறையின் முதன்மைச் செயலர் / ஆணையர் திருமதி ஜெயஸ்ரீ ரகுநந்தன், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மை கூடுதல் ஆணையர் திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., நிலசீர்திருத்த இயக்குநர் திரு. ஜெ.சந்திரகுமார், இ.ஆ.ப., இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் மு.ஜெயராமன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில், தமிழக அரசு ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிடும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை செம்மையோடு செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகம் செய்யப்பட்டு பொது மக்களிடம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ள புதிய விரைவு பட்டா மாறுதல் திட்டம், பள்ளி மாணவ மாணவர்களுக்குத் தேவையான அனைத்து வகையான சான்றிதழ்களையும் தாம் பயிலும் பள்ளியிலேயே பெற்றுக் கொள்ளுதல், பெண்களை பெரிதும் கவர்ந்துள்ள விலையில்லா மிக்சி கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கிடும் திட்டம், புதிய உழவர் பாதுகாப்புத்திட்டம் வங்கிகள் மூலம் முதியோர் ஓய்வூதியம் வழங்கிடும் திட்டம் போன்ற சமூக பாதுகாப்புத்திட்டங்கள் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்கள். கடந்த இரண்டாண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் புதிய திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு 'மக்களைத் தேடி வருவாய்த்துறை – அம்மா திட்டம் (**AMMA**-Assured Maximum service to Marginal people in All Villages) என்கிற திட்டமும் திறம்பட செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து மக்களுக்கும் இந்த திட்டம் முழுமையாக போய் சேரும் வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்திடவும், அம்மா திட்டத்தினை வேகமாக செயல்படுத்துவது குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அரசின் பிற துறைகளுக்கெல்லாம் முன்னோடியாய் முதுகெலும்பாய் விளங்கிடும் இந்த வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் யாவும் உரிய நேரத்தில் உரிய மக்களைச் சென்றடைய செய்திடும் வகையில் நாம் அனைவரும் அர்ப்பணிப்போடு பணியாற்றிட வேண்டுமாறு உங்களை அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையருக்காக
வருவாய் நிருவாகம், எழிலகம், சென்னை 5.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**